2003 ஏப்ரல் 23]

உருவாக்குவதற்காக பல்வேறு நோக்கங்களிலே மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அவினாசியிலே, தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அந்த மாணவர்கள் மேல்படிப்பு படிப்பதற்காக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிப்பதற்காக செல்லவேண்டியுள்ளது. அதிக தொலைவு உள்ள கிராமங்களில் உள்ள மாணவர்கள் போக்குவரத்து வசதியும், தங்குமிட விடுதி வசதியும் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு படிப்பு எட்டாத கொட்டாவியாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அடுத்த ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 291, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

291—

சொகுசுப் பேருந்து

***8726—மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு இரவில் ஒரு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 23

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பொம்பலூரில் இருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தை அறிவித்திருந்தாலும், அந்த மாவட்டத்திலிருந்து அந்த மக்கள் சொகுசுப் பேருந்தில் செல்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆனால் 103 நெம்பர் உடைய ஒரே ஒரு பஸ் மட்டும்தான் இரவில் செல்கிறது. ஆகவே, விவசாயிகள், வர்த்தகர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், படித்தவர்கள் இரவிலே சொகுசுப் பேருந்தில் போவதற்கு திருச்சி வழியாகப் போகிற பஸ்ஸை பெரம்பலூர் வரை விட்டு, அந்த வழியாகப் போவதற்காவது அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தடம் எண் 103-ல் பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு சாதாரணப் பேருந்து இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் திருச்சியிலிருந்து 12 பேருந்துகள் பெரம்பலூர் வழியாக 24 நடைகள் அங்கிருந்து சென்னைக்கு வருகின்றன. இதிலே பயணிகளுடைய விழுக்காடு 85 சதவிகிதம்தான் இருக்கிறது. இன்னும் முழுமையாக பயணிகள், அந்தப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் கூடுதலாக மேலும் ஒரு சொகுசுப் பேருந்தை இயக்கினால் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற சாதாரண பேருந்தினுடைய வருவாய் பெருமளவு பாதிக்கப்படும் என்பதால் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திருச்சியில் இருந்து பெரம்பலூர் வழியாகச் செல்கின்ற அந்த 12 பேருந்துகளில் ஒன்றிரண்டு பேருந்துகளை சொகுசுப் பேருந்துகளாக மாற்றி அந்த வழியாக இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளவழகன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அரியலூரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சிக் காலத்திலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிறுத்தப்பட்ட பேருந்தை இயக்கினால் நமது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் அரியலூரில் இருப்பதனால் அடிக்கடி அங்கேயிருந்து புறப்பட்டு சென்னைக்கு வர ஏதுவாக இருக்கும் என்பதனாலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைத் தலைவர் அவர்களை பஸ்ஸிலே அனுப்புவதற்கு முடிவு பண்ணிவிட்டீர்களா?

திரு. ப. இளவழகன்: இல்லை, அவர் கேட்டுக்கொண்டு இருக்கிறார். (சிரிப்பு) மேலும், எங்கள் பகுதி பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கும் என்பதால் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளவழகன் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜரெத்தினம்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் நகரம், பெரம்பலூர் மாவட்டத்தின் தலைநகரமாகும். அதுபோலவே, பெரம்பலூர் மாவட்டத்திலே அரியலூர் நகரமும், பெரம்பலூர் நகரமும் இரண்டு நகரங்களுமே வளர்ந்து வந்து கொண்டிருக்கிற நகரங்கள் ஆகும். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து

அரியலூரிலிருந்து பெரம்பலூருக்கு, பெரம்பலூர் வழியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்தை விட முன்வருவாரா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். ஆகவே, உங்களுடைய கோரிக்கையும் அதிலே இணைத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 292, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

292—

மின் விநியோகம்

•12010—திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்:

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் விநியோகத்தில் மின்சாரம் பெரிய அளவில் திருடி பயன்படுத்துவதைத் தடுக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காவல் துறையைச் சேர்ந்த காவல் துறைத் துணைத் தலைவர், விழிப்புப் பணி அவர்களின் தலைமையின்கீழ் தலைமைப் பொறியாளர், மின் திருட்டு தடுப்புக் குழுவில் 16 மின் திருட்டு தடுப்புக் குழுக்கள் மற்றும் தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் நேரடிப் பார்வையில் 2 பறக்கும் படைகள் தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்களில் இரவு, பகலாக திடீர் மின் சோதனைகள் மேற்கொண்டு மின் திருட்டுகளைக் கண்டுபிடித்து வருகின்றன.